முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்.

முன்னிலை: திரு.இரா.வேலரஸ், பி.எஸ்.சி., பி.எல்., எல்.எல்.எம்.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய்கிழமை
அசல் வழக்கு எண்.51/2014
(CNR. No.TNSA01-000097-2014)

1. உஷாராணி
2. கே.சாந்தி
3. சந்தோஷ்குமார் .... வாதிகள்

/எதிராக/

1. பி. ஜாகீர் உசேன்
2. எம். ராமசாமி ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 24.02.2026–ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.ராஜசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சுரேஷ்பாபு அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு நிலுவையில் இருந்தபோது 2–ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் மேற்படி 2–ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கில் வாதிகளால் கோரப்பட்டுள்ள பரிகாரத்தை விட்டுகொடுத்து விட்டதாக கடந்த 13.10.2022– அன்று வாதிகள் தரப்பில் குறிப்புரை தாக்கல் செய்யப்பட்டும், அவரை பொறுத்து வாதிகளால் கோரப்படும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் :–

## தீர்ப்புரை

1–ம் பிரதிவாதி வாதிகளுக்கு தாவா தொகையான ரூ.15,50,000/–த்தையும் மேற்படி தொகைக்கு தாவா தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 18% வட்டியும் சேர்த்து வாதிகளுக்கு 1–ம் பிரதிவாதி

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 18:59:00 +0530

செலுத்த வேண்டும் என்றும், தொகை வசூலாகும் காலம்வரை தாவா சொத்தின்மீது பற்றுகை ஏற்படுத்த கோரியும், தாவா செலவுதொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–

தாவா சொத்து கே.ஏ.சின்னகண்ணு மற்றும் ஆர்.வி.மணி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். பிரதிவாதிகள் இருவரும் கடந்த 20.12.2010 அன்று மேற்படி கே.ஏ.சின்னகண்ணு மற்றும் ஆர்.வி.மணி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் பெறும்பொருட்டு சதுரடி ரூ.289/–க்கு விலைபேசி ஒரு கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரதிவாதிகள் கூட்டாக சேர்ந்து மேற்படி தாவா சொத்தை விற்பனை செய்யும் பொருட்டு வாதிகளிடம் சதுரடி ரூ.350/– க்கு விலைபேசி கடந்த 27.02.2011 –ம் தேதியில் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு அன்றைய தேதியிலேயே கிரைய முன்தொகையாக ரூ.40,00,000/–ஐ பிரதிவாதிகள் வாதிகளிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். மேலும் 06.03.2011 ம் தேதியன்று பிரதிவாதிகள் வாதிகளிடமிருந்து மேலும் ரூ.10,00,000/–ஐ கிரைய முன்தொகையாக பெற்றுக்கொண்டு கிரைய ஒப்பந்த பத்திரத்தின் முதல் பக்கத்தின் பின்பக்கத்தில் மேற்குறிப்பு செய்துள்ளனர். மேலும் பிரதிவாதிகள் 5 மாதத்திற்குள் வாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிடுவதாக உறுதியும் அளித்தனர். கிரைய ஒப்பந்தம் அமுலில் இருக்கும் காலத்தில் பிரதிவாதிகள் கே.ஏ.சின்னகண்ணு மற்றும் ஆர்.வி.மணி ஆகியோர்களிடமிருந்து 1–ம் பிரதிவாதியின் சகோதரர் பி.ஆசிக் உசேன் பெயரில் 20.04.2011 அன்று ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 18:59:10 +0530

இந்நிலையில் கிரைய ஒப்பந்தப்படி வாதிகளுக்கு கிரையம் செய்து கொடுக்காமல் பொது அதிகாரம் பெற்ற தன் சகோதரர் மூலமாக ரூ.3,00,000/−த்திற்கு 1−ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாக ஒரு கிரையப்பத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வாதிகள் பிரதிவாதிகளை தொடர்புகொண்டு கேட்டபோது, பிரதிவாதிகள் வாதிகள் கொடுத்த கிரைய முன்தொகையான ரூ.50,00,000/−த்துடன் லாப தொகையில் ரூ.8,00,000/− சேர்த்து மொத்தம் ரூ.58,00,000/− தருவதாக ஒப்புக்கொண்டார்கள். பிரதிவாதிகள் ஒப்புக்கொண்ட தொகையான ரூ.58,00,000/−த்தில் ரூ.15,00,000/−ம் செலுத்தி 08.08.2012 தேதியில் ஒரு ஒப்பந்தம் எழுதி வாதிகளுடன் செய்துகொண்ட 27.02.2011 தேதிய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. அதில் வாதிகளும், பிரதிவாதிகளும் சாட்சிகள் முன்பு கையொப்பம் செய்துள்ளார்கள். மீண்டும் 08.09.2012 ம் தேதியில் பிரதிவாதிகள் மேலும் ரூ.10,00,000/− ஐ வாதிகளிடம் செலுத்தி அதை 08.08.2012 ம் தேதிய ரத்து ஒப்பந்த பத்திரத்தில் வரவு வைக்கப்பட்டது. மீண்டும் 29.10.2012 அன்று பிரதிவாதிகள் மேலும் ரூ.10,00,000/− ஐ வாதிகளிடம் செலுத்தினர். அதை 08.08.2012 ம் தேதிய ரத்து ஒப்பந்த பத்திரத்தில் வரவு வைக்கப்பட்டது ஆக மொத்தம் பிரதிவாதிகள் செலுத்தியது ரூ.35,00,000/− ஆகும். பிரதிவாதிகளிடமிருந்து அட்வான்ஸ் தொகை ரூ.15,00,000/−மும், லாபதொகை ரூ.8,00,000/−மும் வாதிகளுக்கு வரவேண்டியிருந்தது. ஆனால் வாதிகளுக்கு மேற்படி தொகையை செலுத்தாமல் வீட்டுமனைகளை 1−ம் பிரதிவாதி ஜாகீர்உசேன் பல நபர்களுக்கு விற்பனை செய்ய தொடங்கினார். வாதிகள் பலமுறை கேட்டும், காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்ட தொகையை வாதிகளுக்கு செலுத்தவில்லை. இறுதியாக 2−ம் பிரதிவாதி கொடுக்கவேண்டிய ரூ.15,00,000/−த்தில் பாதி தொகையான ரூ.7,50,000/−ஐ

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 18:59:17 +0530

செலுத்துவதாக ஒப்புக்கொண்டு 24.07.2013ம் தேதியில் வாதிகளிடம் ரூ.4,50,000/– ரொக்கமாக செலுத்திவிட்டு வாதிகளுக்கு தலா ரூ.1,00,000/– வீதம் பின்தேதியிட்ட காசோலைகளை 2–ம் பிரதிவாதி வழங்கினார். எனவே வாதிகள் 31.08.2013ம் தேதியில் வாதிகளுக்கு 1–ம் பிரதிவாதி அட்வான்ஸ்தொகையில் தன் பங்கிற்கு தரவேண்டிய ரூ.7,50,000/–த்தை கேட்டும், மேலும் லாபத்தில் 1–ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி தரவேண்டிய ரூ.8,00,000/–ஐ கேட்டும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள். அறிவிப்பை 1–ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டபோதும் மேற்படி தொகைகளை வாதிகளுக்கு தர முன்வரவில்லை. 2–ம் பிரதிவாதி கொடுத்த காசோலையை வாதிகள் தங்கள் வங்கியின் மூலம் பணம் வசூல் செய்ய தாக்கல் செய்தபோது போதிய பணமில்லை என்று மேற்படி காசோலைகள் திரும்பி விட்டன. எனவே 21.01.2014–ம் தேதியன்று வாதிகள் தங்கள் வழக்கறிஞர் மூலம் 2–ம் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினார்கள். அதனை பெற்றுக்கொண்ட 2–ம் பிரதிவாதி பொய்ய சங்கதிகளுடன் 27.01.2014 அன்று பதில் அறிவிப்பு அனுப்பினார். இதுசம்மந்தமாக மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138–இன்கீழ் 2–ம் பிரதிவாதி மீது தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த தாவா 1–ம் பிரதிவாதி மீது மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே முதல் பிரதிவாதி வாதிக்கு தாவா தொகையான ரூ.15,50,000/–த்தையும், மேற்படி தொகைக்கு தாவா தாக்கல் செய்த நாளிலிருந்து வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 18% வட்டியும் சேர்த்து வாதிக்கு 1–ம் பிரதிவாதி செலுத்த வேண்டும் என்றும், தொகை வசூலாகும் காலம்வரை தாவா சொத்தின்மீது பற்றுகை செய்ய கோரியும் வாதிகளால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 18:59:25 +0530

3. <u>1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையில் உள்ள சங்கதிகளின் சுருக்கம் பின் வருமாறு:–</u>

வழக்கு சட்டப்படியும், பொருண்மைகள்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இந்த பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை வாதிகளே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவராவார்கள். கடந்த 27.02.2011 ஆம் தேதியிட்ட கிரய ஒப்பந்த ஆவணத்தின்படி வாதிகள் 1–ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற ஒருபோதும் தயாராகவோ, விருப்பமுடனோ இருந்ததில்லை என்பதால்தான் கடந்த 30.11.2011 ஆம் தேதியன்று P.ஆசிக் என்பவரிடம் தகுந்த பிரதிபிரயோஜனத்திற்கு 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்துவிட்டார். வாதிகள் முன்பண தொகையான ரூ.50,00,000/– மற்றும் லாப தொகை ரூ.8,00,000/–ஐ திருப்பி கொடுக்க ஒத்துக்கொண்டார்கள். இந்த பிரதிவாதி, 2ம் பிரதிவாதியுடன் சேர்த்து ரூ.35,00,000/– தொகையை மூன்று தவணைகளாக வெவ்வேறு தேதிகளில் செலுத்தியுள்ளார்கள். மீதித் தொகையான ரூ.15,00,000/– மற்றும் லாப தொகை ரூ.8,00,000/–ஐ தொழிலில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக உடனடியாக கட்ட இயலவில்லை. அதுசம்பந்தமாக வாதிகள் உடடினயாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தனர். காவல் துறையினர் விசாரணை சமயத்தில் வாதிகளுக்கு மீதித் தொகையான ரூ.15,00,000/– மற்றும் ரூ.8,00,000/– ஆனது திருப்பி செலுத்தப்பட்டுவிட்டது. பிரதிவாதிகள் மீதித் தொகையை செலுத்தவில்லை என்று சொல்வது தவறானதாகும். வாதிகள் காவல்துறையினரின் நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவில்லை. இந்த வழக்கில் குறிப்பிடப்பட்ட சொத்தை கடந்த 30.11.2011 ஆம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட சூரமங்கலம் ஆவண எண்.7803/2011 ன்படி 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றார். அதற்கு

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 18:59:32 +0530

முன்பு, கடந்த 20.12.2010 ஆம் தேதியன்று சில நபர்களுக்கிடையே கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. கடந்த 27.02.2011 ஆம் தேதியன்று வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே கிரய ஒப்பந்தமானது வாதிகளிடமிருந்து ரூ.40,00,000/– பெற்றுக்கொண்டு ஏற்படுத்தப்பட்டது. பின்னர் கடந்த 06.03.2011 ஆம் தேதியன்று மேற்கண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூ.10,00,000/–ஐ பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டார்கள். மேற்கண்ட கிரய ஒப்பந்தத்தின் கால அளவு 5 மாதங்கள் என நிர்ணயம் செய்யப்பட்டது. பலமுறை கேட்டும் வாதிகள் மேற்கண்ட கிரையத்தை முடித்துக்கொள்ள தயாராக இல்லை. ரூ.50,00,000/–ஐ திரும்ப பெற வாதிகள் ஒப்புக்கொண்டார்கள். அதன்படி பிரதிவாதிகள் ரூ.35,00,000/–ஐ தவணையாக கொடுத்துவிட்டார்கள். மீதித் தொகையான ரூ.15,00,000/–ஐ தொழிலில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக உடனடியாக கொடுக்க முடியாத காரணத்தினால் வாதிகள் அதுசம்பந்தமாக 14.06.2013 ஆம் தேதியன்று சேலம் காவல் ஆணையாளர் அவர்களிடம் புகார் கொடுக்கப்பட்டது. மேற்படி புகாரின் பேரில் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டபோது முழு தொகையான ரூ.50,00,000/–யும் வாதிகளுக்கு திருப்பி கொடுக்கப்பட்டுவிட்டது. வாதிகள் வட்டி மற்றும் நஷ்டஈடாக ரூ.8,00,000/– கேட்டார்கள். மேற்கண்ட தொகையும் விசாரணை காலத்திலேயே செலுத்தப்பட்டுவிட்டது. பிரதிவாதிகள் இருவரும் கூட்டாக ரூ.15,00,000/– மற்றும் ரூ.8,00,000/–ஐ கடந்த 24.07.2013 ஆம் தேதிக்கு முன்பே அதாவது காவல்துறையினர் விசாரணை சமயத்திலேயே செலுத்திவிட்டார்கள். வாதிகள் கடந்த 14.06.2013 ஆம் தேதியன்று கொடுத்த புகாரின் சமயத்திலேயே இந்த பிரதிவாதி மீதித் தொகையான ரூ.7,50,000/– மற்றும் ரூ.4,00,000/– ஆகியவற்றை வாதிகளுக்கு செலுத்திவிட்டார்.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 18:59:40 +0530

ரூ.3,00,000/- காசோலையை 2ம் பிரதிவாதி வாதிகளுக்கு கொடுத்ததாக கூறுவது உண்மையல்ல. வாதிகள் தூய்மையான கரத்துடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. இந்த வழக்கானது காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்து விவரம் தவறானதாகும். எனவே வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையில் உள்ள சங்கதிகளின் சுருக்கம் பின் வருமாறு:-

வழக்கு சட்டப்படியும், பொருண்மைகள்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இந்த பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை வாதியே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவராவார். கடந்த 21.01.2014 ஆம் தேதியன்று 2ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டது என்பதும், கடந்த 27.01.2014 ஆம் தேதியன்று மேற்கண்ட அறிவிப்பிற்கு வழக்கறிஞர் மூலமாக பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்பதும் உண்மையானதாகும். பொய்யான சங்கதிகளுடன் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்பது பொய்யானதாகும். அசல் வழக்கு தாக்கல் செய்யும் போதே, வாதிகள் சேலம், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.5ல் இந்த பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கில் இந்த பிரதிவாதி எதிர்வாதம் செய்தும் வந்துள்ளார். இந்த பிரதிவாதி இந்த வழக்கிற்கு அவசியமற்ற நபர் ஆவார். 2ம் பிரதிவாதிக்கு எதிராக எவ்வித வழக்குமூலமும் ஏற்படவில்லை. எனவே, வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 18:59:46 +0530

5. <u>வழக்குரை, எதிர் வழக்குரை ஆகியவைகளை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இவ்வழக்கில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன :–</u>

1. Whether the plaintiff is entitled to recover the suit amount from the defendants?

2. To what other relief?

6. வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை. வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட 2–ம் வாதியை 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அவர் ஏற்றுக்கொண்ட ஆவணங்கள் அவர்மூலமாக பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. <u>எழுவினா 1</u> :–

இவ்வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக பணப்பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தனித்தனியாக பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 2–ம் பிரதிவாதி ராமசாமி இறந்துவிட்டார். மேற்படி 2–ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கில் வாதிகளால் கோரப்பட்டுள்ள பரிகாரத்தை விட்டு கொடுத்து விட்டதாக கடந்த 13.10.2022 – இல் வாதிகள் தரப்பில் குறிப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி இறந்துபோன 2–ம் பிரதிவாதியை பொறுத்து

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 18:59:53 +0530

வாதிகளால் இவ்வழக்கில் கோரப்படும் பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று முடிவு செய்யப்படுகிறது.

8. வாதிகள் தங்களது தரப்பு கட்சியை நிரூபிக்கும்விதமாக வா.சா.1 ஆக 2–ம் வாதி விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1–ம் பிரதிவாதியின் தரப்பில் வாய்மொழி சாட்சியங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை. வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட வாதியை 1–ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றாவணங்கள் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ளவாறு 1–ம் பிரதிவாதிக்கு எதிராக பணப்பரிகாரத்தை அடையக்கூடியவர்களா? என்பதை காண வேண்டியுள்ளது.

9. வாதிகள் தங்களது வழக்கு பிராதிலும் வா.சா.1 ஆக விசாரித்துக்கொண்ட 2–ம் வாதி தனது சாட்சியத்திலும் வழக்கு சொத்து ஒரு சின்னகண்ணு மற்றும் மணி என்பவர்களுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றும், அதனை சதுரடி ஒன்றுக்கு ரூ.289/– க்கு கிரையம் பெற்றுக்கொள்வதாக பிரதிவாதிகள் இருவரும் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டு மேற்படி ஒப்பந்தத்தை அனுசரித்து சதுரடி ஒன்றுக்கு ரூ.350/– க்கு வாதிகளுக்கு விற்பனை செய்வதாக 27.02.2011 அன்று ஒரு விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டு அன்றைய தினமே வாதிகளிடமிருந்து பிரதிவாதிகள் ரூ.40,00,000/–ஐ முன்பணமாக பெற்றுக்கொண்டார்கள் என்றும், மேலும் கிரைய தொகையில் இருந்து ரூ. 10,00,000/–ஐ 06.03.2011 அன்று பிரதிவாதிகள்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 19:00:00 +0530

பெற்றுக்கொண்டு மேற்படி ஒப்பந்த பத்திரத்திலேயே மேற்குறிப்பு செய்து கொடுத்தார்கள் என்றும், மேற்படி ஒப்பந்த தேதி முதல் 5 மாத காலத்திற்குள் வழக்கு சொத்தை தங்களுக்கு விற்பனை செய்வதாக ஒப்பந்த பத்திரத்தில் கால நிர்ணயம் கண்டு எழுதப்பட்டது என்றும், மேற்படி சின்னகண்ணு மற்றும் மணி ஆகியோர்களிடமிருந்து 1–ம் பிரதிவாதியின் சகோதரர் ஆசிக்உசேன் பெயரில் 20.04.2011 அன்று ஒரு பொது அதிகார பத்திரத்தை பெற்று அதனை அனுசரணையாக கொண்டு 30.11.2011 அன்று 1–ம் பிரதிவாதியின் பெயருக்கு அவர் கிரைய ஆவணத்தை எழுதி கொண்டார் என்றும், இது சம்மந்தமாக தங்களுக்கு சொத்தை கிரையம் கொடுக்காமல் 1–ம் பிரதிவாதி வேறு கிரைய ஆவணத்தை எழுதிகொண்டார் என்று அவர்களை கேட்டபோது பிரதிவாதிகள் முன்பணமாக பெற்றிருந்த ரூ.50,00,000/–ஐயும் அதற்கு லாப தொகையாக ரூ.8,00,000/–ஐயுமாக மொத்தம் ரூ.58,00,000/– ஐ திருப்பி கொடுத்துவிடுவதாக தெரிவித்து 08.08.2012 அன்று ரூ.15,00,000/–ஐ வாதிகளிடம் செலுத்தி ஒரு ஒப்பந்த ரத்து பத்திரம் சாட்சிகள் முன்னிலையில் எழுதி கொள்ளப்பட்டது என்றும், மேற்படி ஒப்பந்த ரத்து பத்திரத்தின் அசல் 1–ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றும், மீண்டும் 08.09.2012 அன்று ரூ.10,00,000/–ஐயும், 29.10.2012 அன்று ரூ.10,00,000/–ஐயும் பிரதிவாதிகள் வாதிகளிடம் செலுத்திய வகையில் ரூ.35,00,000/– செல்லாகிவிட்டது என்றும், பாக்கி முன்பணம் ரூ.15,00,000/– மற்றும் லாபதொகை ரூ.8,00,000/– தங்களுக்கு பிரதிவாதிகள் கொடுக்க வேண்டி இருந்தது என்றும், இந்நிலையில் 2–ம் பிரதிவாதி மேற்படி பணம் ரூ.15,00,000/–த்தில் ரூ.7,50,000/–ஐ தங்களுக்கு கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அதிலிருந்து ரூ.4,50,000/–ஐ தங்களிடம் பணமாக கொடுத்துவிட்டு தங்கள் மூவருக்கும் தலா ரூ.1,00,000/– வீதம் மூன்று காசோலைகள்

R.Velaras Digitally signed by R.Velaras
Date: 2026.03.10
19:00:06 +0530

கொடுத்தார் என்றும், ஆனால் 1–ம் பிரதிவாதி தங்களுக்கு தரவேண்டிய ரூ.7,50,000/–த்தையும், லாப தொகை ரூ.8,00,000/–த்தையும் தரவில்லை என்பதால் 1–ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி ரூ.15,50,000/– ஐ தர வேண்டும் என்று அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி 2–ம் பிரதிவாதி கொடுத்த காசோலைகளின் பெயரில் பணம் வசூலாகாத காரணத்தினால் தனியாக வழக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், எனவே மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்ட பிறகும் 1–ம் பிரதிவாதி வாதிகளுக்கு செலுத்த வேண்டிய பணம் ரூ.15,50,000/–ஐ திருப்பி செலுத்தாத காரணத்தினால் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

10. மேற்படி வழக்கில் ஆஜரான 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து வாதிகளிடம் பெற்றிருந்த முன்பணம் மற்றும் மேற்படி முன் பணத்திற்குண்டான வட்டி தொகை ரூ.8,00,000/– ஆகியவற்றினை சேர்த்து ரூ.58,00,000/– ஐ திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் உண்மைதான் என்றும், பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து 27.02.2011 அன்று ரூ.40,00,000/–மும், 06.03.2011 அன்று ரூ.10,00,000/–மும் மேற்படி ஒப்பந்த பத்திரத்தின் படிக்கு வாதிகளிடம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், வழக்கு சொத்தை 1–ம் பிரதிவாதியே கிரையம் பெற்றுவிட்ட காரணத்தினால் மேற்படி முன்பணம் ரூ.50,00,000/–த்தில் ரூ.35,00,000/–ஐ பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து வாதிகளுக்கு கொடுத்துவிட்டார்கள் என்றும், பிரதிவாதிகளின் வியாபாரம் சரிவர போகவில்லை என்ற காரணத்தினால் ரூ.15,00,000/–ஐ பிரதிவாதிகள் வாதிகளுக்கு தர இயலாமல் நிறுத்தி வைத்திருந்தார்கள்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 19:00:13 +0530

என்றும், எனவே இதுசம்மந்தமாக வாதிகள் சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு 14.06.2013 அன்று ஒரு புகாரை பிரதிவாதிகளின் மீது கொடுத்து மேற்படி புகார் நில அபகரிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்டு அங்கு இருதரப்பினரும் ஆஜராகி பேசபட்டதில் முன்பண பாக்கி ரூ.15,00,000/—ஐயும் அதற்கு லாப தொகையாக ரூ.8,00,000/—ஐயும் சேர்த்து பிரதிவாதிகள் செலுத்தி விடுவதாக ஒப்புக்கொண்டார்கள் என்றும், அதன் அடிப்படையில் மேற்படி காவல் துறையினர் விசாரணை நிலுவையில் இருந்தபோதே பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து முன்பணம் ரூ.15,00,000/—ஐயும், லாப தொகை ரூ.8,00,000/—ஐயும் வாதிகளுக்கு செலுத்தி விட்டார்கள் என்றும், அதன் காரணமாக மேற்படி புகாரானது முடிக்கப்பட்டுவிட்டது என்றும், ஏற்கனவே வாதிகள் பிரதிவாதிகளிடமிருந்து ரூ.15,00,000/— மற்றும் ரூ.8,00,000/— ஆகமொத்தம் ரூ.23,00,000/—ஐ போலிஸ் விசாரணை மூலமாக பெற்றுக்கொண்ட பிறகும் வாதிகள் தவறான சங்கதிகளோடும், உண்மை சங்கதிகளை மறைத்தும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் வாதிகளின் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார். மேற்படி 1—ம் பிரதிவாதி அவரது பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகளை இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்றும், எனவே வழக்கு தரப்பினர்கள் அவரது வழக்கு சங்கதிகளை நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்காதபோது அந்த சங்கதிகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசயிமில்லை என்று வாதிகளின் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் தெரிவித்து தம்முடைய வாதத்திற்கு ஆதரவாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட முன்னோடி தீர்ப்பான **T.Tamilarasan —Vs— arokkiasamy and Others,**

R.Velaras Digitally signed by R.Velaras
Date: 2026.03.10 19:00:19 +0530

**Reported in 2007 (3) CTC 59 (Mad), –** என்ற முன்னோடி தீர்ப்பினை மேற்கோள் காட்டினார். ஆனால் இவ்வழக்கில் 1–ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் மேற்படி 1–ம் பிரதிவாதிக்கு சரியாக பேச்சு வரவில்லை என்றும், இது சம்மந்தமாக அவருக்கு மருத்துவ சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், அவரால் நீதிமன்றத்தில் ஆஜராகி பேச இயலாது என்ற காரணத்தினாலும், நீதிமன்ற ஆணையர் மூலமாக விசாரணை மேற்கொண்டாலும் 1–ம் பிரதிவாதிக்கு பேச்சு வராது என்ற காரணத்தாலும், அவரை இவ்வழக்கில் ஒரு சாட்சியாக விசாரிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், இருந்தபோதிலும் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1–இன் மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களே வாதியின் வழக்கு தவறானது மற்றும் பொய்யானது என்பதை நிரூபிப்பதற்கு போதுமானது என்றும் வாதிட்டார். எனவே, மேற்படி வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு உண்மை சங்கதிகளை கொண்டுள்ளதா? என்பதையும், வாதிகள் தங்களது வழக்கு சங்கதிகளை நிரூபித்துள்ளார்களா? என்பதையும் காணவேண்டியது அவசியமாக உள்ளது.

11. வாதிகள் தங்களது வழக்கு பிராதில் வாதிகளுக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்குமிடையே இருந்த பணப்பிரச்சனை மற்றும் நிலப்பிரச்சனை சம்மந்தமாக சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் ஏற்கனவே புகார் கொடுத்து இரு தரப்பினரையும் அழைத்து விசாரணை செய்தார்கள் என்ற எந்த ஒரு சங்கதியையும் தெரிவிக்கவில்லை. இருந்தபோதிலும் மேற்படி வா.சா.1–ஐ 1–ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது கடந்த 14.06.2013 அன்று இந்த பிரதிவாதிகள் மீது/ பிரதிவாதிகளிடமிருந்து பணத்தை மீட்டுத்தரகோரி பி.சா.ஆ.1

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 19:00:26 +0530

புகாரானது வாதிகளால் கொடுக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதிகளிடம் தாங்கள் கொடுத்திருந்த அட்வான்ஸ் தொகை ரூ.50,00,000/—த்தில் ரூ.35,00,000/—ஐ திருப்பி கொடுத்துவிட்டதாகவும், ரூ.15,00,000/—ஐயும் அதற்கான வட்டியையும் கொடுக்காமல் ஏமாற்றி வருவதாகவும், எனவே இந்த பிரதிவாதிகள் மீதும் ஒரு ஆசிக்உசேன் மற்றும் பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்கள், பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்ற நபர்கள் மீதும் குறிப்பிட்டு புகாரை கொடுத்ததோடு, மேற்படி ஆசிக்உசேன் மற்றும் பிரதிவாதிகளிடமிருந்து ரூ.15,00,000/— பணம் மற்றும் வட்டியை மீட்டு கொடுக்கும்படி தெரிவித்து 14.06.2013 அன்று மேற்படி புகாரை கொடுத்துள்ளார்கள் என்பது தெரிய வருகின்றது. மேற்படி புகாரை பெற்றுக்கொண்ட சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அதனை நில அபகரிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்து அதன் பேரில் உரிய விசாரணை மேற்கொண்டு ஆவணங்களை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும்படி பணித்துள்ளார் என்பதையும் தெரிந்து கொள்ள முடிகின்றது. மேற்படி புகாரானது நில அபகரிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதில் 09.07.2013 அன்று இரு தரப்பினரையும் சேலம் நில அபகரிப்பு பிரிவிற்கு அழைத்து விசாரணை மேற்கொண்டுள்ளார்கள் என்பதும், மேற்படி விசாரணையில் 09.07.2013 வரை முன்பணம் ரூ.50,00,000/—த்தில் ரூ.45,00,000/—ஐ பிரதிவாதிகள் வாதிகளிடம் செலுத்தி முடித்துள்ளார்கள் என்பதையும், பாக்கியுள்ள ரூ.5,00,000/—ஐ 10.07.2013 க்குள் செலுத்திவிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும், அதன்பிறகு உள்ள லாபதொகை ரூ.8,00,000/—ஐ 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தலா ரூ.4,00,000/—

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 19:00:31 +0530

வீதம் வாதிகளுக்கு செலுத்திவிட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும், அதில் இரு தரப்பினரும் சாட்சி கோபால் என்பவர் முன்னிலையில் கையொப்பம் செய்து ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதையும், பி.சா.ஆ.4 ஆவணமானது வெளிபடுத்துகின்றது. எனவே, இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 09.07.2013 தேதியில் 1, 2 – பிரதிவாதிகளிடமிருந்து வாதிகள் முன்பணம் ரூ.50,00,000/–த்தில் ரூ.45,00,000/–ஐ பெற்றுக்கொண்டதாக ஏற்றுக்கொண்டுள்ள சூழ்நிலையில் முன்பணத்தில் பாக்கி ரூ.5,00,000/– மட்டும் அன்றைய தினம் பாக்கி என்பதால் இவ்வழக்கை முன்பணம் ரூ.50,00,000/–த்தில் பாக்கி ரூ.15,00,000/– இருப்பதாகவும், அதில் 1ம் பிரதிவாதி அவரது பாதி பங்கான ரூ.7,50,000/– மற்றும் லாப தொகை ரூ.8,00,000/– சேர்த்து ரூ.15,50,000/–த்தை செலுத்த வேண்டியுள்ளது என வழக்கில் தெரிவித்து தாக்கல் செய்துள்ள சங்கதி ஏற்புடையதாக இல்லை.

12. மேலும், மேற்படி காவல்துறை விசாரணையில் கடந்த 23.07.2013 அன்று ஆஜரான வாதிகளும், 1–ம் பிரதிவாதியும் போலிசார் விசாரணை மேற்கொண்டு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே உள்ள நிலப்பிரச்சனை சம்மந்தமாகவும், பண வரவு செலவு சம்மந்தமாகவும் முக்கிய நபர்கள் மூலமாக பேசி முடித்துக்கொண்டதாகவும், எனவே வாதிகள் கொடுத்த புகார்மனுவின்மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என்று இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டு எழுதி கொடுத்துள்ளார்கள் என்பதை பி.சா.ஆ.2 ஆவணமானது வெளிப்படுத்துகின்றது. அதேபோன்று பி.சா.ஆ.2 ஆவணத்தை அனுசரித்து பி.சா.ஆ.3 ஆவணம் வாதிகள் தரப்பில் கொடுக்கப்பட்ட புகார் மனுவானது நில அபகரிப்பு பிரிவு

R.Velaras
Digitally signed by R.Velaras
Date: 2026.03.10 19:00:38 +0530

காவல் துணை கண்காணிப்பாளரால் இருதரப்பினருக்கிடையே உள்ள பிரச்சனை முடிக்கப்பட்டுவிட்டது என்று முடிவு செய்து தீர்வு காணப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தக்கூடிய வகையில் உள்ளது. எனவே பி.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படைக்கு 23.07.2013 அன்றே வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே உள்ள நிலம், பணப்பிரச்சனை முக்கிய நபர்கள் மூலமாக பேசி முடித்துக்கொண்டுவிட்டதாக வாதிகள் ஏற்றுக்கொண்டு, புகாரின்பேரில் மேல்நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று ஏற்றுக்கொண்டுள்ள காரணத்தினால் மீண்டும் அதே சங்கதிகளுக்காக மேற்படி சங்கதிகளை முற்றிலும் மறைத்து வாதிகள் 1, 2 பிரதிவாதிகளிடம் இருந்து துர்லாபம் அடைய வேண்டி இந்த வழக்கினை தவறான சங்கதிகளோடு தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெள்ளத் தெளிவாக தெரிய வருகிறது.

13. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.5 ஆவணத்தின் படிக்கு வாதிகள் மற்றும் 2-ம் பிரதிவாதிக்கிடையே ஏற்பட்ட ஒரு ஒப்பந்த பத்திரமானது குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பி.சா.ஆ.5 ஆவணமானது 24.07.2013 அன்று எழுதப்பட்டதாக காணப்படுகிறது. மேற்படி தேதியில் 1-ம் பிரதிவாதி வாதிகளுக்கு ரூ.7,50,000/- பணம் தர வேண்டியுள்ளது என்று அவர் தரப்பினர் இல்லாமலேயே குறிப்பிடப்பட்டுள்ளது 2ம் பிரதிவாதியை அது கட்டுப்படுத்தாது. அதேபோன்று 06.06.2013 தேதியிட்ட பி.சா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிறகு பி.சா.ஆ.1 புகாரானது வாதிகளால் காவல் துறையில் கொடுக்கப்பட்டு அதன்பேரில் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வாதிகளுக்கு செல்லாக வேண்டிய பணம் முழுவதும் பிரதிவாதிகளால் செல்லாகிவிட்டது என்று வாதிகள்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 19:00:44 +0530

ஏற்றுக்கொண்டுள்ள காரணத்தினால் மேற்படி பி.சா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்பு முக்கியத்துவம் பெறவில்லை.

14. இவ்வழக்கில் பி.சா.ஆ.7 ஆக 08.08.2012 தேதியிட்ட கிரைய ஒப்பந்த ரத்து பத்திரம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரைய ஒப்பந்த ரத்து பத்திரமும் பி.சா.ஆ.1 காவல்துறை புகாருக்கு முந்தைய ஆவணம் என்ற காரணத்தினால் மேற்படி காவல் துறையினரின் விசாரணையின் அடிப்படையில் பிரதிவாதிகள் வாதிகளுக்கு சேர வேண்டிய தொகை முழுவதும் செலுத்திவிட்டதாக ஒப்புக்கொண்டு மேற்படி புகாரின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று வாதிகளே ஏற்றுக்கொண்டுள்ள காரணத்தினாலும் மேற்படி வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்று 1–ம் பிரதிவாதியின் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞரின் வாதம் ஏற்புடையதாக உள்ளது. எனவே, பி.சா.ஆ.7 ஆவணத்தை மேற்கோள்காட்டி வாதிகள் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டப்படி வழக்கு தொகையை செலுத்த வேண்டும் என்ற வாதம் எற்புடையதல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கால கெடுவிற்குள் வாதிகள் வழக்கு சொத்தை கிரையம் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தார்கள் என்பதற்கு யாதொரு ஆவண சாட்சியமும் இல்லை. 31.08.2013 தேதியிட்ட வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பினையும், அதன்பிறகு மூன்று வாதிகளுக்காகவும் தனித்தனியாக 21.01.2014 தேதியிட்டு 2–வது பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பியுள்ளார்கள் என்பதையும், வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றது. மேற்படி வழக்கறிஞர்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 19:00:51 +0530

அறிவிப்புகளுக்கு 2–ம் பிரதிவாதி தனித்தனியாக பதில் வழக்கறிஞர் அறிவிப்புகளை அனுப்பியுள்ளார் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே வாதி வழக்கில் தெரிவித்துள்ள சங்கதிகளை வா.சா.1ன் குறுக்குவிசாரணை மூலமாகவே 1–ம் பிரதிவாதி பொய்யான சங்கதிகள் என்பதை நிரூபித்து அதற்குரிய ஆவணங்களையும், 1–ம் பிரதிவாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு விட்ட காரணத்தினால் 1–ம் பிரதிவாதி பதிலுரையில் தெரிவித்துள்ள சங்கதிகளை இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமாக அளிக்க முன்வரவில்லை என்ற அடிப்படையில் வாதிகளின் வழக்கு அனுமதிக்கக்கூடியது என்று வாதிகளின் தரப்பில் தெரிவிக்கப்படும் வாதம் ஏற்புடையதல்ல.

15. வாதிகள் தங்களுக்கும், பிரதிவாதிகளுக்குமிடையே இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நிலப்பிரச்சனை மற்றும் பணப்பிரச்சனை சம்மந்தமாக காவல் துறையில் கொடுக்கப்பட்ட புகார் மற்றும் அதன் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மற்றும் அது முடிக்கப்பட்ட விதம் ஆகியவற்றை பொறுத்து எந்த ஒரு சங்கதியையும் தெரிவிக்காமல் உண்மை சங்கதிகளை மறைத்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே வாதிகள் இந்நீதிமன்றத்தை சுத்தமான கரங்களுடன் அணுகவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது. வாதிகள் சுத்தமான கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை என்ற காரணத்தினாலும், ஏற்கனவே பிரதிவாதிகளிடம் பெற்றுக்கொண்ட பணத்தை தவறான கணக்கீட்டுடன் மீண்டும் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ள காரணத்தினாலும், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட முன்னோடி தீர்ப்பான **Ramjas Foundation and Another**

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 19:01:03 +0530

**–Vs– Union of India Reported in 2011 (2) MLJ 162 (SC)** என்ற முன்னோடி தீர்ப்பில் வழங்கப்பட்ட வரையறைக்கிணங்க வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு வழங்கபடக்கூடியதல்ல. எனவே இவ்வழக்கில் பிரதிவாதி ஆஜராகி சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற அவசியம் ஏற்படவில்லை. இந்த சூழ்நிலையில் வாதிகளால் இவ்வழக்கில் கோரியுள்ள பணப்பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே வாதிகள் 1–ம் பிரதிவாதிக்கு எதிராக கோரியுள்ள பணப்பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல என முடிவு செய்து இந்த எழுவினா 1–க்கு தீர்வு காணப்படுகிறது.

16. எழுவினா 2:

இதர பரிகாரங்களைப்பொறுத்த வரையில் வாதிகள் உண்மை சங்கதிகளை மறைத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக பணப்பரிகாரம் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 2–ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரத்தினை விட்டு கொடுத்து 1–ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் பணப்பரிகாரத்தை கோரியுள்ள காரணத்தினாலும், வாதிகள் உண்மை சங்கதிகளை மறைத்து தவறான சங்கதிகளோடு இந்த வழக்கினை தாக்கல் செய்து பணப்பரிகாரம் கோரியுள்ள காரணத்தினாலும், வாதிகளின் இவ்வழக்கு Vexatious Claim கொண்டது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே வாதிகள் 1–ம் பிரதிவாதிக்கு இவ்வழக்கு செலவு தொகையுடன் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 35(A) –இன் படிக்கு Exemplary cost – ஆக ரூ.3000/–ஐயும் செலுத்த வேண்டும் என முடிவு செய்து இந்த எழுவினா 2–க்கு தீர்வு காணப்படுகிறது.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 19:01:10 +0530

முடிவில், வாதிகள் 2–ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரத்தை விட்டு கொடுப்பதாக கடந்த 13.10.2022– அன்று குறிப்பு தாக்கல் செய்த காரணத்தினால் அவருக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்தும், 1–ம் பிரதிவாதிக்கு எதிராக வாதிகளால் கோரப்படும் பணப்பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல என இவ்வழக்கினை 1–ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்தும், வாதிகளின் இவ்வழக்கு Vexatious Claim – கொண்டது என்ற காரணத்தினால் 1–ம் பிரதிவாதிக்கு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 35(A) –இன் படிக்கு ரூ.3000/– ஐ Exemplary Cost– ஆக வாதிகள் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் சரி பார்க்கப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 19:01:16 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் பட்டியல் :–</u>

<u>வாதிகள் தரப்பு சாட்சி:–</u>

| | |
|---|---|
| வா.சா.1 | திருமதி.சாந்தி |

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.02.2011 | உஷாராணி, சாந்தி, சந்தோஷ்குமார் ஆகியோர்கள் "ஏ" பார்ட்டியாகவும், எம்.ராமசாமி, ஜாகிர்உசேன் "பி" பார்ட்டியாகவும் இருந்து எழுதிக்கொண்ட கிரைய ஒப்பந்தப்பத்திரம். | அசல் |
| வா.சா.ஆ.2 | 31.08.2013 | வாதிகள் தங்கள் வழக்கறிஞர் மூலம் 1–ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 21.01.2014 | 1–ம் வாதி வழக்கறிஞர் மூலம் 2–ம் | அலுவலக |

| | | | |
|---|---|---|---|
| | | பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | நகல் |
| வா.சா.ஆ.4 | 21.01.2014 | வாதிகள் தனது வழக்கறிஞர் மூலம் 2–ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | 21.01.2014 | 2–ம் பிரதிவாதிக்கு 3–ம் வாதி அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி: இல்லை</u>

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :–

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 14.06.2013 | வாதிகள் சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கொடுத்த புகார் | ஒளி நகல் |
| பி.சா.ஆ.2 | 23.7.2013 | வாதிகள் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு கொடுத்த புகாரில் உள்ள 2–வது கையொப்பம் | ஒளி நகல் |
| பி.சா.ஆ.3 | 23.07.2013 | முடிக்கப்பட்ட மனுவின் இரசீது | ஒளி நகல் |
| பி.சா.ஆ.4 | 09.07.2013 | நில அபகரிப்பு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு கொடுத்த புகாரில் உள்ள 2–வது கையொப்பம் | ஒளி நகல் |
| பி.சா.ஆ.5 | 24.07.2013 | வாதிகள் மற்றும் 2–ம் பிரதிவாதிக்கிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்த பத்திரம் | ஒளிநகல் |
| பி.சா.ஆ.6 | 06.06.2013 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| பி,.சா.ஆ.7 | 08.08.2012 | கிரைய ஒப்பந்த ரத்து பத்திரம் | அசல் |

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 19:01:23 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.